1995 ஏப்ரல் 10]

290—

வைத்தூரில் வேளாண்மைத் துணை மையம் அமைத்தல்

*35471—**திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வைத்தூர் கிராமத்தில் வேளாண்மை விரிவாக்கத் துணை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த வைத்தூர் என்ற கிராமம் மற்றும் அதனுடைய சுற்றுப்புறத்தில் உள்ள கிட்டத்தட்ட 20,30 கிராமங்கள் பயன்படும் வகையில் அங்கே ஒரு வேளாண் விரிவாக்கத் துணை மையம் இந்த ஆண்டாவது அமைக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தூர் கிராமம் என்பது புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்டது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே 2 வேளாண் விரிவாக்க மையங்கள்—ஒன்று குன்னாண்டார் கோவிலிலும், மற்றும் ஒன்று கீரனூர் என்ற இடத்திலும் செயல்பட்டு வருகின்றன. எனவே மேலும் வைத்தூர் கிராமத்தில் ஒரு துணை வேளாண் விரிவாக்க மையம் அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 291, திரு. பி. சொக்கலிங்கம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.